முதல் வழித்தடம் நீட்டிக்கப்படுவதால்

# 10 மெட்ரோ ரயில்கள் கூடுதலாக வாங்கப்படும்

## நிர்வாகம் தகவல்

சென்னை, டிச. 8: மெட்ரோ ரயிலின் முதலாவது வழித்தடம் நீட்டிக்கப்பட உள்ளதால் 2020ம் ஆண்டுக்குள் கூடுதலாக 10 மெட்ரோ ரயில்கள் வாங்கப்பட உள்ளது.

சென்னையில் 45.1 கி.மீ தூரத்திற்கான மெட்ரோ ரயில் முதலாவது வழித்தட பணிகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. தற்போது முதலாவது வழித்தடத்தில் டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரை அடுத்த மாதம் முதல் ரயிலை இயக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரயில் முதலாவது வழித்தடத்தில் மொத்தம் 41 மெட்ரோ ரயில்களை இயக்கி வருகிறது. பிரேசிலை சேர்ந்த ஆல்ஸ்டோம் நிறுவனத்தில் இருந்து 2013ம் ஆண்டு முதலாவது மெட்ரோ ரயில் பெட்டி இறக்குமதி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த நிறுவனத்திடம் இருந்து 9 ரயில் பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டது.

மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட நிறுவனம் ஆந்திர மாநிலம் ஸ்ரீசிட்டியில் ஆலையை தொடங்கியது. இந்நிலையில் 42வது மெட்ரோ ரயிலுக்கான பெட்டிகளை ஸ்ரீசிட்டியில் மெட்ரோ ரயில் மேலாண் இயக்குனர் பங்கஜ் குமார் பன்சால் கொடியசைத்து அனுப்பி வைத்தார். ஸ்ரீசிட்டி தொழிற்சாலையில் இருந்து இதுவரை 33 ரயில்கள் வாங்கப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் முதலாவது வழித்தடத்தை திருவொற்றியூரில் இருந்து விம்கோ நகர் வரை 9.05 கி.மீ தூரத்துக்கு நீட்டிக்கும் பணிகள் நடந்து வருகிறது. அதனால் மெட்ரோ ரயில் முதலாவது வழித்தடத்துக்கு 2020ம் ஆண்டுக்குள் கூடுதலாக 10 ரயில்களை வாங்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.